

## சமுதாய இழிவு நோய் !



சமுதாய இழிவு மனிதனுக்குக் கடுமையான நோயாக இருப்பதால் அதற்கு மருத்துவம் கடுமையாகத் தான் இருக்கும். நமது சமுதாய நோயானது, நம் சமுதாயத்தில் 100க்கு 97 பேராக இருக்கும் மக்கள் இழி மக்களாகவும், 100க்கு 3 பேராக இருக்கும் மக்கள் மேல் மக்களாகவும் இருக்கும்படியான சமுதாய அமைப்பில் இருக்கிறோம். இந்நோய்க்கு, ரண சிகிச்சை போல், அவயவ மாற்று சிகிச்சை போல், சிகிச்சை செய்தால்தான் நோய் தீரும். மற்ற சிகிச்சையால் எந்தப் பயனும் விளையாது; நோய் முற்றிக் கொண்டுதான் போகும். நல்ல வைத்தியனாகிய என்னுடைய கருத்து, நோய்க்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை அறிந்துகொள்வதுதான். சமுதாயஇழிவு நோய் எப்படி நமக்கு ஏற்பட்டது என்பதை உணர்ந்துள்ளேன்.

**தந்தை பெரியார்**

## என்னுடைய கடமை!



எவன் ஆண்டாலும் சரி, இந்நாட்டு மக்களை மனிதனாக மதிக்க வேணும்; அதற்கெல்லாம் பாடுபட வேண்டும்; பாடுபட இடமளிக்க வேண்டும்.

இந்த லட்சியத்தை முன்வைத்து, யார் பாடு பட்டாலும், இதை எங்கெல்லாம் நான் கண்டாலும் அங்கெல்லாம் நான் வலியப் போகிறவன், ஆதரிக்கிறவன். சாதி ஒழிய வேண்டும், அனைவர்க்கும் சுதந்திரம் வேண்டும், காட்டுமிராண்டித் தன்மை மாறி அறிவாளி மக்களாக ஆக்கப்பட வேண்டும் என்ற கொள்கைகளை முன் வைத்து யார் பாடுபட்டாலும், அவர்களை ஆதரிப்பது என்னுடைய கடமை!

**- தந்தை பெரியார்**

# தி.மு.க. பொறியாளர் அணியின் சென்னை மண்டல ஆய்வுக் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

சென்னை, செப். 18

சென்னை மண்டல அளவிலான பொறியாளர் அணியின் ஆய்வுக் கூட்டம் மண்டலப் பொறுப்பாளர் இரா.நரேந்திரன் தலைமையில், மாநில பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மாநில பொறியாளர் அணித் தலைவர் துரை.கி.சரவணன், மாநிலத் துணைச் செயலாளர்கள் வே.உமாகாந்த், சி.பிரதீப், பரமேசுகுமார் ஆகியோர் முன்னிலையில் இன்று (18.09.2024 புதன்கிழமை) காலை 10 மணிக்கு, திருநின்றவூர், டிலைட் பார்ட்டி ஹாலில் நடைபெறும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கீழ்கண்ட மாவட்ட பொறியாளர் அணியின் நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1) சென்னை வடகிழக்கு,
2) சென்னை வடக்கு,
3) சென்னை கிழக்கு,
4) சென்னை மேற்கு,
5) சென்னை தெற்கு,
6) சென்னை தென்மேற்கு,
7) திருவள்ளூர் கிழக்கு,
8) திருவள்ளூர் மேற்கு,
9) திருவள்ளூர் மத்திய,
10) காஞ்சிபுரம் வடக்கு,
11) காஞ்சிபுரம் தெற்கு

**பொருள்:**

1) பொறியாளர் அணியின் மாவட்ட நிர்வாகிகளின் கடந்த ஒரு ஆண்டு செயல்பாடுகளை ஆய்வு செய்தல்,
2) பொறியாளர் அணியின் மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் அளவில் பொறியாளர் அணி நிர்வாகிகளை நேர்காணல் செய்து தேர்வு செய்வது குறித்து விளக்கம்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி


# கெ.ஞானசேகரன் தலைமையில் உத்திரமேரூரில் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவிப்பு

காஞ்சிபுரம், செப். 18-

பகுத்தறிவுப் பகலவன், அறிவாசன், தந்தை பெரியார் அவர்களின் 146வது பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆலோசனைக்கிணங்க, நேற்று (17.9.2024) காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூரில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு முன்பாக ஒன்றியச் செயலாளர் கெ. ஞானசேகரன் தலைமையில் பேரூர் செயலாளர் என். எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சித் தலைவர் சசிகுமார், இரா.நாகன் உள்ளிட்டோர் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், முன்னணியினர், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சமூக வலைதளங்களில் வலம் வருவது!




### மாத்தூர் கா.தாமரைச்செல்வன் தலைமையில் புழல் எம்.நாராயணன் முன்னிலையில்

# மாதவரம் வடக்கு பகுதி 19 வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைகள் வழங்கினார்

சென்னை,செப்.18-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி மாத்தூர் 19வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம், மாத்தூர் எம்எம்டிஏ பகுதியில் அமைந்துள்ள மாத்தூர் பொது வியாபாரிகள் சங்கத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு 19 வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமை தாங்கினார்.

வட்ட தலைவர் கே. சரவணன் வரவேற்றார்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் கலந்து கொண்டு முப்பெரும் விழா மற்றும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

மாவட்ட வர்த்தகர் அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, கே. ஏழுமலை, பகுதி கழக நிர்வாகிகள் பி. நிர்மல் குமார், வி. கார்த்திகேயன்,கே. ராஜா, ஆ. திருமலை, ந. ரகுவரன், பா. துளசி, கே. சங்கர், து. கோவர்தனன்,வே. கன்னியப்பராஜ், சையத் அப்சல், இ.கதிரவன், வி. ஹரி சுப்பிரமணி ஆகியோருடன்,

இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள் டி. ராமகிருஷ்ணன், அறிவழகி பாலகிருஷ்ணன், என். பரந்தாமன், வி. திராவிட வீரன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் பி. துரைசாமி, எஸ். உதயகுமார் வி. மணிகண்டன், பா. கோபிநாத், பி. ஜெயராஜ், கே. துரைதசரதன், கே. சேரலாதன், பேன்சி ரமேஷ், காஞ்சனா மோகன்,

பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் த. விக்னேஸ்வரன், என். பிரபு, ஆ. சசிதரன், டி. விக்னேஷ், சி. தமிழ்ச்செல்வி

19ஆவது வட்ட பாக முகவர்கள் தமிழரசன், சுமன், சுகாசினி, ஜெயராஜ், நாகராஜ், ராஜா,சரஸ்வதி, ஞானசேகரன், அத்திகுளம் தேவி, நேரு நகர் சங்கர், கோபிநாத், சாந்தகுமார், பெரியநாயகி, பிரவீன் குமார், மதிவாணன், கஸ்தூரி, அண்ணாதுரை, உதயகுமார், செல்வகுமார், நெடுஞ்செழியன், கலைச்செல்வி, செல்வராஜ், ரகுவரன், சுரேஷ்குமார், அஜித்குமார், ஜானகிராமன், கங்காதரன்

இரா. குகன், கணேசன், கா. குமார், கே. விஜயகுமார், ராஜேஷ் கண்ணன், முகமது முஸ்தபா, சிவராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்

இந்த நிகழ்ச்சியில் 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் ஏற்பாட்டில் பாக முகவர்கள் மற்றும் பாக ஒருங்கிணைப்பாளர் நிர்வாகிகளுக்கு நாடாளுமன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்றியதற்காக கேடயமும், சான்றுகளும், வேட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டு, மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் உள்ளிட்ட நிர்வாகிகள் வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொது உறுப்பினர்கள் அனைவருக்கும் அறுசுவை ஆட்டுக்கறி பிரியாணி உள்ளிட்ட சைவ, அசைவ உணவுகள் வழங்கப்பட்டன.

இறுதியாக மாமன்ற உறுப்பினர் க. காசிநாதன் நன்றி கூறினார்

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை 19 ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் செய்திருந்தார்.

# விருதுநகர் வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

விருதுநகர், செப்.18-

விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-




விருதுநகர் வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (19.09.2024-வியாழக்கிழமை) மாலை 5 மணியளவில், மல்லாங்கிணர், இராஜாமணி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் வி.தங்கராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள்/நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்/துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள்/பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளட்ட கழகத்தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். பொருள்:

நாடாளுமன்ற தேர்தலில் 40/40 வெற்றிக்காக நன்றி தெரிவித்தல்

வருகின்ற 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களில் தி.மு.கழகம் வெற்றி பெற்றிட கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.



மண்ணிவாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.கெஜலட்சுமியின் கணவரும், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் எம்.டி.லோகநாதனின் சகோதரரும், தலைமை பொதுக்குழு உறுப்பினருமான எம்.டி.சண்முகம் அவர்கள் இயற்கை எய்தினார். அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் மற்றும் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

### சிவகங்கை வடக்கு ஒன்றியக் கழகம் சார்பில்

# பவளவிழாவினை முன்னிட்டு திருமலையில் கழகக் கொடி ஏற்று விழா!

சிவகங்கை, செப். 18 -

கழகத் தலைவர் முதலவர் தளபதி அவர்கள் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு கழகத்தின் பவள விழாவினை முன்னிட்டும் வீடுகள் தோறும் தெருக்கள் தோறும் கழகக் கொடியினை ஏற்றுமாறு உத்தரவிட்டிருந்தார்.

அவரது உத்தரவினை ஏற்று மாவட்ட கழக செயலாளர் கூட்டு றவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் ஆலோசனையின் பேரில் சிவகங்கை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் தலைமையில் திருமலை கிராமத்தில் இரு வண்ண கழக கொடி ஏற்றப்பட்டது.

அவைத்தலைவர் பாலுசாமி முன்னிலையில் மூத்த கழக முன்னோடி சோலைமலை கொடி ஏற்றி இனிப்புகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி ,எஸ்.

.எம். மதிவாணன், ஒன்றிய குழுத் தலைவர் திருமதி மஞ்சுளா பாலச்சந்தர், மாவட்ட சுற்றுச்சூழல். அணி துணை அமைப்பாளர் மு. குமணன், தொ. மு.ச. செயலாளர் முருகேசன் ஒன்றிய கவுன்சிலர் பத்மாவதி பிரபாகரன் மகளிரணி லதா நாகராஜன் நிர்வாகிகள்முத்துராமலிங்கம்,ராமமுர்த்தி, சோமசுந்தரம் மாரி உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் 27 வது வார்டு இந்திரா நகரில் நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் கழக கொடி ஏற்றி இனிப்புகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர் ராஜா சருபுதீன்,வட்ட பிரதிநிதி சேது உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.





மாதவரம் வடக்கு பகுதி 19வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில், மாத்தூர் பொது வியாபாரிகள் சங்கத்தில் நடைபெற்றது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம் எல் ஏ கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அணிகள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். இறுதியாக மாமன்ற உறுப்பினர் க. காசிநாதன் நன்றி கூறினார்.